கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணகுமார் | வயது | 52 |
| தந்தை பெயர் | முனுசாமி | ஜாதி | |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் | மதம் | |
| ஊர் | வடபாதிமங்கலம் | தாலுக்கா | |

( 1,2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி சார்பாக கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 3 வது எதிரி சிவா என்பவரை தெரியும். 13.07.2019 அன்று கானுர் செக்போஸ்டில் நானும் தலைமை காவலர் ராஜாராமனும் பணியில் இருந்தோம். மாலை 17.00 மணியளவில் தாலுக்கா காவல் நிலைய உதவி ஆய்வாளர் விக்னேஷ் வாகன தனிக்கைக்காக கானுர் செக்போஸ்டிற்கு வந்தார். நானும் தலைமை காவலரும் உதவி ஆய்வாளரும் வாகன தனிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 50 AA9567 என்ற எண் கொண்டு Hero Hond Passion pro என்ற இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்ததால் நாங்கள் நிறுத்தி தனிக்கை செய்யும் போது ஆஜர் எதிரிகள் மற்றும் சிவா எங்களை ஏன் வண்டியை செக் செய்கிறீர்கள் என்று கெட்ட வார்தைகளால் திட்டினார்கள். நாங்கள் இந்த இடத்தில் தான் வாகன தனிக்கை பணியில் ஈடுபட்டுள்ளோம் என்று கூறியதற்கு அவர்கள் இருசக்கர வாகனத்தில் இருந்த பீர் பாட்டிலை உடைத்து இனிமேல் இந்த இடத்தில் எங்கள் வாகனத்தை நிறுத்தி செக் செய்தால் பீர் பாட்டிலால் குத்தி கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டி விட்டு சென்று விட்டார்கள். ஆஜர் எதிரிகள் மற்றும் 3 வது எதிரி செய்கையானது எங்களை வேலை செய்யவிடாமல் இடையூறு ஏற்படுத்தும் விதமாக இருந்தது. பிறகு காவல் நிலையம் சென்று தலைமை காவலர் புகார் மனு கொடுத்தார். சம்பவம் தொடர்பாக ஆய்வாளர்

என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் பணிசெய்யும் இடத்திற்க எதிரே உள்ள பெட்ரோல் பங்கில் CCTV கேமரா உள்ளது என்றால் சரிதான். நான் பணியில் இருந்ததற்கான பணிப்பதிவேடுகளை ஆய்வாளரிடம் சமர்பித்தேனா என்றால் இல்லை. இருசக்கர வாகன டேக் கவரில் இருந்த பீர்பாட்டிலை எடுத்து உடைத்தது யார் என்று பெயர் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. இருசக்கர வாகனத்தில் முதலாவதாக,இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாக யார் அமர்ந்திருந்தனர் என்று என்னால் கூற இயலுமா என்றால் இயலாது. மேற்படி விபரத்தை என்னை விசாரணை செய்த காவல் அதிகாரியிடம் கூறினேனா என்றால் கூறினேன். எங்கள் காவல் துறை அதிகாரி என்னை சாட்சியாக வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தினாரா என்றால் இல்லை. உடைந்த பீர்பாட்டிலை கைப்பெற்றப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகள் ஓட்டிவந்த இருசக்கர் வாகனம் எதிரிகள் ஓடிய பின்னர் என்ன ஆனது என்றால் காவல் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. காவல் நிலையத்திற்கு யாரால் எடுத்துசெல்லப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த பிறகு எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் பணியில் இருந்தேன் என்றால் நானும் ராஜாராமன் என்பவரும் இரவு 8.00 மணி வரை பணியில் இருந்தோம். இந்த சம்பவம் காவல் துறையினை தவிற வேறு யாருக்காவது தெரியுமா என்றால் எனது விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் பணியில் இருந்திருந்தால் பீர் பாட்டிலை உடைத்தது யார் என்றும் இருசக்கர் வாகனத்தை யார் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றது என்றும் எனக்கு தெரிந்திருக்கும் நான் அந்த சமயத்தில் நான் அங்கு பணியில் இல்லாத காரணத்தில் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் அப்போது அங்கு பணியில் இருந்தேன். ஆஜர் எதிரிகள் யாரும் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டவும் இல்லை பீர் பாட்டிலை உடைத்து குத்த முயற்ச்சி செய்யவும் இல்லை பணி செய்யவிடமால் தடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் காவல் ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதராவக எதிரிகளை பொய்சாட்சியம் அளிக்க சொல்லி வற்புறுத்தியதன் காரணமாக அவர்கள் ஒப்புக்கொள்ளாததல் அவர்கள் மீது ஏற்பட்ட காழ்புணர்ச்சி காரணமாக எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89 /2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராமன் | வயது | 59 |
| தந்தை பெயர் | பன்னீர்செல்வம் | ஜாதி | |
| தொழில் | தலைமை காவலர் பணி ஓய்வு | மதம் | |
| ஊர் | தேவர் கண்ட நல்லூர் | தாலுக்கா | |

( 1,2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி சார்பாக கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தேவர்கண்ட நல்லூரில் வசித்து தாலுக்கா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 3 வது எதிரி சிவா என்பவர்களை தெரியும். கடந்த 13.07.2019 ஆம் தேதி மதியம் 14.00 மணியிலிருந்து நானும் தலைமை காவலர் கிருஷ்ணகுமார் என்பவரும் கானூர் செக்போஸ்ட் பணியில் இருந்தோம். மதியம் 17.00 மணியளவில் எங்கள் காவல் நிலையத்தில் இருந்து உதவி ஆய்வாளர் விக்னேஷ் வாகன தனிக்கை செய்வதற்காக எங்கள் கானூர் செக்போஸ்டிற்க வந்தார். உதவி ஆய்வாளருக்கு உதவியாக நானும் தலைமை காவலரும் வாகன தனிக்கையில ஈடுபட்டிருந்தோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்காக இருசக்கர வாகனத்தில் செந்தில்குமார், சிவா, கண்ணன் என்பவரும் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்த வாகனத்தை மறித்து மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் வரக்கூடாது என்பதற்காக வழக்கு போடுவதற்காக உதவி ஆய்வாளரிடம் அழைத்து வந்தோம். உதவி ஆய்வாளர் மோட்டார் பெட்டி கேஸ் போடுவதற்காக தன்னுடைய பேனாவை எடுத்தார். அப்போது 1ம் எதிரி அந்த பேனாவை பிடுங்கி தூக்கி எறிந்துவிட்டு உதவி ஆய்வாளரை தரக்குறைவாக திட்டினார். நாங்கள் சென்று அவர்களை கேட்டதற்கு கேஸ் போட்டீர்கள் என்றால் உங்களை வெட்டிவிடுவேன் என்றும் கெட்டவார்த்தைகளால் திட்டினார். நாங்கள் எவ்வளவு தடுத்தும் எங்களை பணி செய்ய விடாமல் தடுத்து கெட்ட வார்த்தைகளால் திட்டி தகராறு

செய்தனர். பிறகு காவல் நிலையம் வந்து ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் எழுதி கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சம்பவம் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அன்றைய தினம் நான் பணியில் இருந்ததற்கான பணிப்பதிவேடுகளை ஆய்வாளரிடம் சமர்பித்தேனா என்றால் சமர்பித்தேன். பாரா பதிவேடுகளை ஆய்வாளர் பார்வையிட்டார். நான் பணியில் இருந்தபோது என்னோடு பணியில் இருந்த காவலர்களை தவிர்த்து வேற எந்த நபர்களுக்கு சம்பவம் தொடர்பாக தெரியும் என்று நான் என் புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் எனக்க நியாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் நான் பணியில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்தில் ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வேண்டும் என எதிரிகளை வற்புறுத்தியதாகவும் அதற்கு எதிரிகள் மறுத்த காரணத்தினால் அவர்கள் மீது காழ்புணர்ச்சி கொண்டு பொய் புகார் அளிக்கப்பட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தையால் திட்டவும் இல்லை பணி செய்ய விடாமல் தடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல.